

புதுடெல்லியில், நேற்று (08.01.2026) ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் முனைவர் வீரேந்திர குமார் தலைமையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–ன் கீழ் அமைக்கப்பட்ட மத்திய ஆலோசனை வாரியத்தின் 8வது கூட்டத்தில், முதலமைச்சர் அவர்கள் சார்பாக ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு உரையாற்றினார். மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்/அரசு சிறப்பு செயலாளர் ம.லட்சுமி., உடனிருந்தார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம் கவரைப்பேட்டையில் உள்ள நியாயவிலை கடையில் பொங்கல் திருநாளையொட்டி இலவச வேட்டி, சேலை, கரும்பு, பச்சரிசி, சாக்கரை மற்றும் தொகுப்பு நிதி ரூபாய் 3000/ டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் கே.ஜி.நமச்சிவாயம், இ.எம்.ராஜேஷ், கா.சு.ஜெகதீசன், மோகன்பிரசாத், டி.லட்சுமிநாராயணன், கிருபாகரன், பி.கே.நாரயணசாமி, பாட்ஷா, எத்திராஜ், விஜயகுமார், கஜேந்திரன், பாலாஜி, விச்சு, மாரிமுத்து, உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## திருவள்ளூர் மாவட்டம் – வேப்பம்பட்டு கூட்டுறவு நியாய விலை கடையில்

# பொங்கல் பரிசுத் தொகுப்பு - ரூ.3000 ரொக்கத்தொகை!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்.

திருவள்ளூர் ஜன 09;-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், வேப்பம்பட்டு கூட்டுறவு நியாய விலை கடையில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கலை முன்னிட்டு அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பாக தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, முழு கரும்பு மற்றும் ரூ.3000 ரொக்கத்தொகை ஆகியவற்றை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் வழங்கி சிறப்புரையாற்றினார் முன்னதாக நியாய கடை வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள சமத்துவ பொங்கல் தொடங்கி வைத்து பொது மக்களுக்கு சக்கரை பொங்கலை வழங்கினார்



நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் அனைத்து மதத்தினராலும் கொண்டாடப்படும் ஒரே பண்டிகை பொங்கல் பண்டிகையே ஆகும். உயிர் வாழ உணவு முக்கியம் அந்த உணவை உருவாக்கி தருபவர் விவசாயி. விவசாயிகள் உலகத்திற்கு அச்சாணி போன்றவர்கள் என்று வள்ளுவர் கூறியுள்ளார். அதுபோல இப்பண்டிகையின் போது சூரியனுக்கும் நன்றி செலுத்தப்படுகிறது. ஏனெனில் சூரியன் இல்லையெனில் உலகில் எந்த உயிர்களும் வாழ முடியாது. தமிழர்கள் எப்பொழுதும் இயற்கையை நேசிப்பவர்களாகவும், நன்றிகடன் பட்டவர்களாகவே உள்ளார்கள்.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழர் திருநாளாம் பொங்கல் தினத்தை தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் 1 கி பச்சரிசி, 1 கி சர்க்கரை, கரும்பு பொங்கலுக்கு தேவையான பொருட்கள் மற்றும் பொங்கல் செலவுக்காக ரூ.3000 என 2 கோடி 23 இலட்சம் பேருக்கு ரூ. 6937 கோடி செலவில் வழங்கப்படுகிறது.

நமது மாவட்டத்திற்கு 6 இலட்சத்து 46 ஆயிரம் பேருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் பொங்கல் பரிசுத்தொகுப்பு விநியோகம் செய்யப்படுகிறது. ரூ.81 கோடி செலவில் வழங்கப்படுகிறது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் சிறப்புடனும் மகிழ்வுடனும் இருப்பதற்காக பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். இத்தருணத்தில் அவருக்கு நன்றிகள் பல தெரிவித்துக் கொள்கிறோம். அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துகள் என மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி டி.ஜே.கோவிந்தராஜ் ஆவடி மேயர் கு.உதயகுமார், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ். மண்டல கூட்டுறவு இணை பதிவாளர் பா.ஜெயஸ்ரீ, திருவள்ளூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சே.பிரேம்ஆனந்த், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் எஸ்.ஜெயசீலிஜெயபாலன், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மை அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர் எஸ்.ஜெயபாலன், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொது குழு உறுப்பினர் ஜி.விமல்வர்ஷன், திமுக நிர்வாகிகள் ஏ.ரமேஷ், மு.ராஜா, மகேஸ்வரி பால விநாயகம், குட்டி(எ) பாக்த்தவச்சலம், வ.ஹரி, பாஸ்.முருகன், மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 323 வது நாள்!

## கொளத்தூர் கிழக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,ஜன.9-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 323ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (08.01.2026), கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 68, சிவா விஷ்ணு ஆலயம், கார்த்திகேயன் சாலை, பெரியார் நகர். 2) வட்டம் 70, ஜமுனா பாய் நகர், சிம்சன் எதிரில், பெரம்பூர், சென்னை ஆகிய பகுதிகளில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி. கே.சேகர்பாபு அவர்களின் வழிகாட்டுதல்படி தமிழ் நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ் நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.





இந்நிகழ்ச்சியில் ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி. மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ். பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், D.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, P.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: P.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ் குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா. அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S.முரளி, R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திருவெறும்பூர் குண்டூர் 100 அடி சாலையில்

# குதிரைப் பந்தயம் : அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

திருச்சி, ஜன. 9 -

திருச்சி திருவெறும்பூர் அருகே உள்ள குண்டூர் 100 அடி சாலையில், தமிழ்நாடு மாநில குதிரை உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் நலச்சங்கத்தின் சார்பில் முதலாம் ஆண்டு குதிரை பந்தயம் நடந்தது.

இந்த போட்டியினை தமிழக பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்த போட்டியின் போது குதிரை ஒன்று மற்றும் இரண்டு பிரிவுகளிலும் அளவு குதிரை 43 மற்றும் 45 ஆகிய பிரிவுகளிலும், நடு குதிரை மற்றும் பெரிய குதிரை என ஆறு பிரிவுகளில் குதிரை பந்தயம் நடைபெற்றது.

புதுக்குதிரை ஒன்றுக்கு மற்றும் இரண்டிற்கு முதல் பரிசு ரூ20 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ15 ஆயிரம், மூன்றாவது பதிவு ரூ12ஆயிரம் நான்காவது பதிவு ரூ10 ஆயிரம்,

43 அளவு குதிரை 7மைல் தூரம் முதல் பரிசு ரூ25ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ 20 ஆயிரம், மூன்றாவது பரிசு ரூ15 ஆயிரம், நாலாவது பரிசு ரூ 12 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது.

45 அளவு குதிரை 8மைல் தூரம் முதல் பரிசு ரூ30 ஆயிரம், இரண்டாவது பரிசு ரூ25 ஆயிரம் மூன்றாவது பரிசு ரூ20 ஆயிரம் நான்காவது பரிசு ரூ12 ஆயிரம் வழங்கப்பட்டது.

நடு குதிரை 9 மைல் தூரம் போட்டியில் முதல் பரிசு ரூ40 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ30 ஆயிரம் மூன்றாவது பதிவு ரூ20ஆயிரம், நான்காவது பரிசு ரூ13 ஆயிரம் வழங்கப்பட்டது.

பெரிய குதிரை 10 மைல் தூரம் போட்டியில் முதல் பரிசு ரூ50 ஆயிரம் இரண்டாவது பரிசு ரூ 40 ஆயிரம் மூன்றாவது பரிசு ரூ30 ஆயிரம் நான்காவது பரிசு ரூ15 ஆயிரம் வழங்கப்பட்டது.

போட்டியில் சீறிப் பாய்ந்து வெற்றி பெற்ற குதிரைகளுக்கு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கோப்பையும் ரொக்க பரிசினையும் வழங்கினார்.

ஒன்றிய கழகச் செயலாளர்கள் கங்காதரன் மற்றும் கழக நிர்வாகிகள் பொது மக்கள் விளையாட்டு ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .



சென்னை கிழக்கு மாவட்டம் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதியில் கழக துணை அமைப்பு செயலாளர், திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் ப.தாயகம்கவி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் வட்ட கழக செயலாளர் பரிமளாசுரேஷ் ,புல்லட் ரமேஷ், தில்லை கதிரவன்,ஸ்வீட் பாபு ,கோழிக்கடை ராம்மோகன் ,பாலாஜி, அண்ணாதுரை, சிவகௌதம் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.



திருவொற்றியூர் கிழக்கு பகுதியில் எட்டாவது வட்டத்தில் அமைந்துள்ள எஸ்.பி. கோவில் தெருவில் உள்ள நியாய விலை கடையில் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் இரா. முருகேசன் தலைமையில் வட்டக் கழக செயலாளர் டி.சி.வி. மணிகண்டன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகளும் மாவட்ட பிரதிநிதி ஒய். ரஜினி நந்தி ,மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சுகந்தா முனுசாமி ,நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஏ. அருளானந்தம், கணேசன், அபூபக்கர் சித்திக், சி.எஸ்.ஆர். ஜெகன், தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் அரங்கநாதன், ஆர். சின்னபாப்பா, ஆர். ஸ்ரீதர் மாயாவி மோகன், விநாயகம் மற்றும் திரளான கழகத் தோழர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டி!

## அமைச்சர்கள் எஸ்,ரகுபதி – சிவ,வீ,மெய்யநாதன் மற்றும் கே,கே,செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தார்கள்!

புதுக்கோட்டை, ஜன. 9 -

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், தச்சங்குறிச்சியில், ஜல்லிக்கட்டுப் போட்டியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் 03.01.2026 அன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்வில், இயற்கை வளங்கள் துறை அமைச்சர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் “ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை” அனைத்து மாடுபிடி வீரர்களும் ஏற்றுக்கொண்டனர்.

ஜல்லிக்கட்டு உறுதிமொழியான, “எங்கள் தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை கொண்டாடவும், நமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், பேணிக்காப்போம் என்றும், விளையாட்டில் ஈடுபடும் காளைகளுக்கு எவ்வித ஊறும் செய்யமாட்டோம் என்றும், வீரர்களான நாங்கள் சிறந்த நெறிமுறைகளை பின்பற்றுவோம் என்றும், இவ்விளையாட்டில் பங்கேற்கும் காளைகளுக்கும், வீரர்களுக்கும் சிறுதீங்கும் நேராமல் விளை யாடுவோம் என்றும் உளமாற உறுதி கூறுகிறோம்” என்ற ஜல்லிக்கட்டு உறுதிமொழியினை, மாவட்ட ஆட்சித் தலைவர் வாசிக்க, அதனை பின்தொடர்ந்து, அனைத்து மாடுபிடி வீரர்களும் ஏற்றுக்கொண்டனர்.

தமிழகத்தில் இந்த ஆண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டுப் போட்டியாக தச்சங்குறிச்சியில் ஜல்லிக்கட்டுப் போட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியில் சுமார் 300க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் மற்றும் 600 காளைகள் பங்கேற்று சிறப்பாக ஜல்லிக்கட்டுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் ஆம்புலன்ஸ் மற்றும் பணியாளர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இப்போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் மற்றும் காளைகள் முழு மருத்துவ பரிசோதனைக்கு பிறகே அனுமதிக்கப்பட்டனர். மேலும் இந்த ஜல்லிக்கட்டுப் போட்டியானது அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில், முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் , கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, துணைக் காவல் கண்காணிப்பாளர் பிருந்தா, கந்தர்வக் கோட்டை வட்டாட்சியர். எம்.ரமேஷ், கந்தர்வக் கோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் பி. சேகர், எஸ்.பார்த்திபன், முன்னாள் ஊராட்சிமன்றத் தலைவர் எம்.பரமசிவம், கீரை தமிழ் ராஜா, மா.தமிழ் அய்யா, இளையராஜா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு–153, போரூர், அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் 11–ம் வகுப்பு பயிலும் 148 மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், , தலைமை செயற் குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம், பகுதி கழக நிர்வாகிகள் பி. எம்.செல்வராஜ், இரா.பால்பாண்டியன், வட்ட கழக செயலாளர் தி.சார்லஸ், மாமன்ற உறுப்பினர் சாந்திராமலிங்கம் எம்.சி., மற்றும் கழக நிர்வாகிகள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



தாம்பரம் மாநகரம் 50 ஆவது வார்டு ரங்கநாதபுரம் 2 வது தெருவில் உள்ள நியாய விலைக்கடையில் பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளர் மண்டல தலைவர் டி.காமராஜ் பொங்கல் பரிசு ருபாய் 3000 ஆயிரம் மற்றும் பரிசு பொருட்களின் தொகுப்பை வழங்கினார். உடன் மாநகர வர்த்தக அணியின் துணை அமைப்பாளர் இரா செல்வகுமார், பகுதி கழக துணை செயலாளர் ஆர்.செல்வகுமார் மற்றும் வட்ட கழக நிர்வாகிகளும் உடனிருந்தனர்.